**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

-

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்காக இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 178.82 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீளத்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் இறுதி அறிக்கை கணக்குகள் தயாரிப்பதற்கு முன் எங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய பணிக்கொடைக் கணக்கின் பெறுமதி ரூபா 17.76 மில்லியன் குறைத்தும், சம்பள கட்டுப்பாட்டு ஒதுக்கக் கணக்கின் பெறுமதி ரூபா 16.38 மில்லியன் இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய ஊழியர் பணிக்கொடைகள் நீண்ட காலம் நிறுத்தி வைக்கப்படாதிருந்தமையால் சம்பள கட்டுப்பாட்டு கணக்கின் ஊடாக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளுதல் எங்களது கணக்கீட்டு கொள்கையாகும். இதில் செலுத்த வேண்டிய பணிக் கொடை கணக்கின் பெறுமதி ரூபா 76,247 ஆக பழைய மீதியே காண்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 1.38 மில்லியன் பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை. | இந்த தவறு சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒசுசலவில் எஞ்சிய இருப்புக்களின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் கைமாற்றல்களின் பெறுமதிக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு அது உழைக்கப்படாத இலாபமாக சீராக்க வேண்டியிருந்த போதிலும் மிகுதி இருப்புக்களின் கிரயம் குறித்துரைத்த ரீதியில் இனங்காணாமல் இருப்பு மாற்றல்களின் பெறுமதியில் 7 சதவீதத்திற்கு சமமான ரூபா 65.01 மில்லியன் மாத்திரம் உழைக்கப்படாத இலாபமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | பிரதான களஞ்சியத்தில் இருந்து ஒசுசலைகளுக்கு மாற்றப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளில் வருட இறுதியில் எஞ்சியுள்ள இருப்பில் மாற்றப்பட்ட பெறுமதியை சரியாக கணிப்பீடு செய்வதற்காக குறித்துரைத்த கணனி முறைமையொன்று கூட்டுத்தாபனத்தில் காணப்படவில்லை. கூட்டுத்தாபனத்தால் ஒசுசலயின் சராசரியான இருப்பு மாற்றல்களின் சதவீதம் அகற்றி பெறப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட முறைமையில் வருட இறுதியில் எஞ்சியுள்ள இருப்புகளின் மாற்றப்பட்ட பெறுமதி கணிப்பிடப்படுவதுடன், அது கணக்காய்வினாலும், ஏற்றுக்கொள்ளப்பட்டு பல வருட காலம் முதல் அமுல்படுத்தப்படுகின்றது. | ஒசுசலைகளின் எஞ்சிய இருப்புக்களின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் மாற்றப்பட்ட பெறுமதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு அது உழைக்கப்படாத இலாபமாக சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 51,591.79 | 47,604.57 | 3,987.22 | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 51,591.79 மில்லியன் கடன்பட்டோர் மீதியில் ரூபா 211.59 மில்லியன் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை | மருத்துவ வழங்கல் பிரிவுடன் மீதி இணக்கம் தயாரிக்கப்பட்டு உரிய வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப்படும். மிகுதி ரூபா 51,380.2 மில்லியன் ஆன மீதி தற்போது மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியுடன் இணக்கம் செய்யப்படுகின்றது | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1996 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அரச ஒசுசல மூலம் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தரத்தில் குறைந்தமை, காலாவதியான மற்றும் பாதிப்பிற்கு உட்பட்ட மருத்துவ வழங்கல்களின் கிரயம் | 344.23 | 324 | 20.23 | இந்த வேறுபாடு ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிவதற்காக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டதுடன் , அதன் பிரகாரம் உரிய செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை செய்வதற்கும் உரிய பிரகாரம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்கைரீதியான தீர்மானத்தின் பிரகாரம் விற்பனை செய்யப்படுகின்ற திகதி முதல் 30 நாட்களுக்கும் 45 | வியாபார கடன்பட்டோரிடம் இருந்து கடன் அறவிட வேண்டியிருந்த போதும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,488.41 | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் கடனை அறவிட வேண்டிய கால எல்லையில் |

| | | | |
|---|---|---|---|
| | நாட்களுக்கும் இடையிலான காலத்தில் விற்பனைப் பெறுமதி உரிய வியாபார கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,488.41 மில்லியன் தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் தனியார், அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 28.47 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், ரூபா 29.11 மில்லியன் தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்தும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 10.44 மில்லியன் கடன் மீதியை அறவிடுவதற்காக மாத்திரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மில்லியன் ஆன கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட தனியார், அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 28.47 மில்லியனாக காணப்பட்டது. அது பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இருந்து அறவிட வேண்டிய கடன்கட்டோர் பெறுமதியான ரூபா 14.62 தொகையும் ஏனைய அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2.37 மில்லியன் தொகையும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்ட ரூபா 10.44 மில்லியன் கடன் மீதியும் உள்ளடங்கியுள்ளது. | மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கடனை அறவிடுதலை செயற்திறனாக்குதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 51,591.79 மில்லியன் தொகையில் ரூபா 211.59 மில்லியன் தொகை 10 வருடங்களுக்கும் 24 வருடங்களுக்கு இடையிலும், ரூபா 3,253.05 மில்லியன் தொகை 06 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்தும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. மேலே காண்பிக்கப்பட்ட 10 வருடங்களுக்கும் 24 வருடங்களுக்கு | காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 211 மில்லியனை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதி ரூபா 51,380.2 மில்லியனான கடன் மீதி தற்போது மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியுடன் இணக்கம் செய்யப்படுகின்றது. | பழைய கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது முறையானதாக பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடையிலான பழைய ரூபா 211.59 மில்லியன் தொகை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு கோரப்பட்டுள்ள மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனர்களிடமிருந்து பெறவேண்டிய முற்பணம் ரூபா 424.42 மில்லியன் தொகையில் ரூபா 1.05 மில்லியன் தொகை 07 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 4.31 மில்லியன் தொகை 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும் அறவிட வேண்டியிருந்த மீதியாகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வழங்குனருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதும் தீர்த்து வைக்கப்படாத முற்பணங்கள் குறித்துரைத்த கால எல்லையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கிப் பட்டியல் கணக்கின் மீதி ரூபா 19,538.15 மில்லியன் தொகையில் ரூபா 909.18 மில்லியன் தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வழங்குனருக்கு செலுத்தப்படாத நூற்றுக்கு நூறு சதவீத நாணயக் கடிதப் பெறுமதி மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்தினை உள்ளடக்கியிருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 வரை உள்ள செலுத்தப்பட்ட பணத்தை ஈடுசெய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக வழங்குனர்களுக்கு செலுத்தப்படாத பெறுமதி தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757(2) | நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்து அந்த மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கை 2023 மே 16 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல ஒசுசலைகளினதும் நிலையான சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படுள்ளதுடன், பிரதான அலுவலகத்தில் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளது. இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்ட உடன் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் 51 ஆவது நூற்றாண்டிற்காக தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசுகளை வழங்குவதற்காக 54 ஊழியர்களுக்கு ரூபா 3.72 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரத்தின் கீழ் 03 வருடங்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த உடன்படிக்கையில் சம்பளம் அல்லாத இது வரை உரித்தாக இருந்த நலன்கள் அந்த விதத்திலேயே பேணிச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஈடீ 08/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக இலத்திரனியல் பெறுகை முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சு முன்னின்று அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள இலத்திரனியல் பெறுகை முறைமையை அறிமுகப்படுத்துவற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தமையும் அவ்வாறு செய்யும் போது ஏற்படுகின்ற நடைமுறை பிரச்சினைகளின் காரணமாக அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையும் பிரயோக நடைமுறை ரீதியில் அமுல்படுத்தக் கூடிய மட்டத்தில் இதற்காக செயல் படுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டியின் | | | |
| (ன) | 4.3 ஆம் பந்தி | நிறுவனத்தின் வியாபார செயற்பாடுகள், நிதி மற்றும் நிதியல்லா ஆபத்துக்களின் தாக்கங்களை கணிப்பிடல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு தன்மைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற ஆபத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை | கூட்டுத்தபானத்தில் காணப்படுகின்ற ஆபத்துக்களை இனங்காண்பதற்காக ஆலோசனை சேவை உதவி பெற வேண்டியமைக்கு கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்ததுடன், இந்த ஆண்டில் ஆலோசனை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் இடர் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சேவை உதவியை பெற்று இடர் முகாமைத்துவ குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (உ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 3(x) ஆம் பந்தி | பதிவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகளை தற்காலிகமாக கைவிட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக இடர் கடனாக 26 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6.5 மில்லியன் செலுத்தப்படடிருந்தது. | இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முற்பண கணக்கின் கீழ் நிதி வழங்கப்படுவது இல்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய பீஈடீ 08/22 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் அடிப்படையில் படி செலுத்தும் போது ஊழியர்களுக்கு உரித்தான விடுமுறை 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 49.34 மில்லியன் தொகை சேமிக்கப்பட்ட சுகையீன விடுமுறைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரத்தின் கீழ் 03 வருடங்களுக்காக அமுல்படுத்தப்பட்ட இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த உடன்படிக்கைக்கு உரிய மேவுகை செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் இது வரை வழங்கப்பட்டுள்ள நலன்கள் அந்த விதத்திலேயே மாற்றம் இன்றி பேணிச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய பீஈடீ 09/22 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | கூட்டு உடன்படிக்கை அல்லது அது மற்றும் அதற்கு சமமான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் அல்லது சம்பளம் மற்றும் படிகளை அமுல்படுத்துகின்ற அரச கூட்டுத்தாபனம் மற்றும் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களுக்கு மிகையூதியப் படி செலுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு ஊழியருக்கு ரூபா 20,000 வீதம் ரூபா 17.82 மில்லியன் மிகையூதியப் படியாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரத்தின் கீழ் 03 வருடங்களுக்காக அமுல்படுத்தப்பட்ட இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஒன்றிணைந்த உடன்படிக்கையில் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மிகை ஊதிய படி செலுத்துவதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 931.58 மில்லியன் இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,416.42 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,484.84 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் 58 சதவீதத்தால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்ட வருமானம் முறையே ரூபா 13,887.48 மில்லியன் மற்றும் ரூபா 141.47 மில்லியன் ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அந்த வருமானம் 99 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் மத்திய கொள்வனவு அலகு ஊடாக கொள்வனவச் செய்வதற்கு உரிய வருமானம் முறையே ரூபா 2,765.07 மில்லியன் மற்றும் ரூபா 65.45 மில்லியன் ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அந்த வருமானம் 98 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிகதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் 1.06 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும் தேறிய இலாப விகிதம் 1.57 சதவீத்தினால் குறைவடைந்ததுடன், கடன்பட்டோர் புரள்வு விகிதம் 0.85 தடவையினாலும்

குறைவடைந்திருந்துடன், கடன் அறவிடும் காலம் 181 நாட்களால் அதிகரித்திருந்தது. இது தொடர்பாக கவனம் செலுத்தி கூட்டுதாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல் வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தால் தொழில்முயற்சி வளத்திட்ட முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு வரையில் 17 வருடங்கள் அதற்காக கடந்திருந்த போதிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 32.36 மில்லியன் பெறுமதியான கணனி துணைப்பாகங்களில் 09 விடயங்களில் 497 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவைகளின் கிரயம் ரூபா 2.55 மில்லியன் ஆன கணனி மற்றும் துணைப்பாகங்களில் 04 நிலையான சொத்து விடயங்களில் 36 அலகுகள் என்பன 2023 மார்ச் 17 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் பயனற்று காணப்பட்டது. | தொழில்முயற்சி வள திட்டமிடல் செயற்திட்டம் தோல்வியடைந்தமையினால் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணனி துணைப்பாகங்களின் தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன், நட்டம் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயனற்று காணப்படுகின்ற சொத்துக்களை உச்ச அளவில் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளை | • இந்த கொடுப்பனவுகள் தலைவரினதும், | வழங்குனருக்கு முறையான |

| | | |
|---|---|---|
| முறைப்படுத்துவற்காக ஸ்தாபிக்கப்பட்ட குழுவின் மூலம் பரிந்துரை வழங்கப்படுகின்ற வழங்குநர்களுக்கு பரிந்துரைத்த கால எல்லையில் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளவேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் இறுதியாக 2022 யூன் 08 ஆம் திகதி நடைபெற்ற 65 ஆவது குழு தீர்மானத்திற்கு முரணாக 2022 செப்டெம்பர் 02 ஆந் திகதி வரையிலும் 05 வழங்கல் கம்பனிகளுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 525.25 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பொது முகாமையாளரினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளதுடன், அந்த கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.<br>• இந்த கொடுப்பனவின் போது இரண்டரை வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவு செய்யப்படாத மற்றும் வழங்கப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.<br>• ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்காக Global Fund Project மூலம் ரூபா 60.69 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. | திட்டமொன்றின் பிரகாரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விடுவிக்கப்படாத இருப்பாக இனங்காணப்பட்ட 16 இன்டெண்டுகளின் பெறுமதியான ரூபா 155.16 மில்லியன் தொகைக்கான மொத்த தரையிறக்கல் கிரயமாக ரூபா 169.81 மில்லியன் தொகை உரிய வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தமையும், ரூபா ரூபா 21.59 மில்லியன் ஆன 03 இன்டெண்டுகளின் இருப்பை அழிவடையச் செய்வதற்கு 2020 யூன் 14 ஆந் திகதி பணிப்பாளர் | உரிய இருப்பை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் 2023.05.18 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அகற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை அங்கீகாரம் உரித்தாக இருந்த போதும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த இருப்புக்கள் அழிக்கப்படாதிருந்தததுடன் அதற்காக கூட்டுதாபனத்திற்கு மேலதிக கிரயமொன்றைச் செய்ய வேண்டியும் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மருத்துவ வழங்கல் பிரிவில் தரம் குறைந்த மற்றும் பாதிப்பிற்கு உள்ளான மருந்து வழங்கல் காணப்பட்டமை காரணமாக செலவிடப்பட்ட கிரயம், நிர்வாக கட்டணங்கள் மற்றும் அந்த இருப்புக்களை அழிவடையச் செய்யும் செலவினம் என்பவற்றை வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்ட ரூபா 3,405.08 மில்லியன் வரவுத் தாளிற்காக ரூபா 1,529.83 மில்லியன் தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கறுப்பு பட்டியலிடப்பட்ட வழங்குனரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 306.11 மில்லியன் தொகையின் அறவிடல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | வரவுத்தாள் பெறுமதியில் ரூபா 54.19 மில்லியன் தொகை 2023.04.26 ஆம் திகதி வரையில் வழங்குனர்களிடம் இருந்து அறவிடப்பட்டுள்ளது. கொடுப்பனவுகள் புறக்கணித்தமையினால் ரூபா 692.78 மில்லியன் ஆன வரவு தாளுக்காக உரிய வழங்குனர்களை கறுப்பு பட்டியலில் இட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், ரூபா 20.89 மில்லியன் பெறுமதியுடைய வரவுத் தாள் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்குதல்களுக்காக விநியோகிக்கப்பட்ட வரவுத் தாளாக தீர்மானிக்கப்பட்டு அறவிட முடியாதிருந்ததுடன், ரூபா 9.31 மில்லியன் பெறுமதியுடைய வரவுத்தாள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை, ரூபா 14.12 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்துடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடாத வழங்குனர்களிடம் இருந்து அறவிட வேண்டியமை, ரூபா 131.92 | இது வரையில் அறவிடப்படாத பணத்தை வழங்குனரிடம் இருந்து அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மில்லியன் பெறுமதியுடைய வரவுத் தாள்களின் பெறுமதியை செலவு வைத்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட போதும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தரம் குறைந்த, காலாவதியாகிய மற்றும் இழப்புக்கு உட்பட்ட மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 344.23 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தரம் குறைந்த, காலாவதியாகிய மற்றும் இழப்புக்கு உட்பட்ட மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 60.40 மில்லியன் ஆகும். கடந்த ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் தரம் குறைந்த மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 32.29 மில்லியன் இல் ரூபா 23.68 மில்லியன் தொகை 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் மருந்து காலாவதியாகியமை மற்றும் இழப்பீடுகளினால் கூட்டுத்தாபனத்திற்கு செய்வதற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 156.50 மில்லியன் ஆகும். | ஒவ்வொரு நிதியாண்டிற்கும் உரிய தரத்தில் குறைவடைந்த, காலாவதியான மற்றும் இழப்பீட்டிற்கு உட்பட்ட மருந்துகளின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று விற்பனை பிரிவின் பிரதி பொது முகாமையாளருக்கு உரிய நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படுகின்றது. | தரத்தில் குவைடைந்த மருந்துகளின் பெறுமதி வழங்குனர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் மருந்துகள் காலாவதியாவதற்கான காரணங்களை கண்டறிந்து தீர்வினை வழங்குவதற்கும் மற்றும் அதன் காரணங்களுக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகளுக்கிடையே ரூபா 265.88 மில்லியன் பெறுமதியுடைய 19 | வரவுத்தாள் விநியோகித்தல் மற்றும் அறவிடல் செயற்பாடுகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தரத்தில் குவைடைந்த மருந்துகளின் பெறுமதியை வழங்குனர்களிடம் இருந்து அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| விடயங்களின் தரம் குறைவடைந்திருந்ததுடன் அதில் 11 விடயங்களுக்காக ரூபா 177.70 மில்லியன் வரவுத்தாள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 146.61 மில்லியன் தொகை வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 26.225 மில்லியன் பெறுமதியான Trastuzumab (440 mg) தடுப்பூசி அலகுகள் 500 இனை கொள்வனவு செய்வதற்கு உரியதாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரினால் கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் அந்த நிறுவனத்திற்காக விநியோகிக்கப்பட்ட சான்றிதழாக இல்லாதிருந்ததுடன் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தும் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் மூலம் சகல கொள்வனவுகளும் மீண்டும் அறிவிக்கும் வரை தற்காலிகமாக நிறுத்துமாறு அறிவித்து நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த சான்றிதழ் ஆகும். அவ்வாறே சமர்ப்பிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் காலாவதியாகியிருந்தது. கேள்வி விலை மதிப்பீட்டு தொழில்நுட்ப குழு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் | கொள்வனவு செய்யப்படுகின்ற நிறுவனங்களுக்கு அதிகாரம் கையளிக்கப்படுகின்ற ஆவணங்கள் கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மைக்கும், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை வெளியிட்ட அறிவித்தலின் மூலம் கேள்வியின் செல்லுபடிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையுடன் இணங்குவதற்கும் மற்றும் இணங்காதிருப்பதற்கும் பெறுகை குழுவிற்கு அதிகாரம் உள்ளது. | மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றுதழுடன் வழங்குனர்களுக்கு கேள்விகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விநியோகிக்கப்படுகின்ற செல்லுபடியான பதிவு சான்றிதழை சமர்ப்பிப்பதன் கீழ் மாத்திரம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வி தாரருக்கு கேள்வி சமர்ப்பிக்க வேண்டும் என பரிந்துரை செய்திருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொள்ளாது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்காத கேள்விதாரருக்கு பெறுகைக் குழுவினால் கேள்வியை கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக கிரயம் ரூபா 35.76 மில்லியன் ஆன Furosemide Injection BP 20 mg/2 ml தடுப்பூசி மாத்திரைகளில் 5,845,000 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த 99,000 தடுப்பூசி மாத்திரைகளின் இருப்பை கையேற்கும் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளின் காரணமாக இந்த இருப்புக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தமையும் அதற்கான உற்பத்தி தர அறிக்கை (Product Stability Report) வழங்குமாறு வழங்குனருக்கு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைக் குழு தமது மதிப்பீடுகளின் போது போதியளவான கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் வழங்குனரால் Accelerate Stability Report வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் குறிப்பிடப்பட்ட முறைக்குரிய மருந்துகளுக்கு தேவையான நியமம் மற்றும் மாதிரிகளுக்கு இணங்கியிருந்ததாக உற்பத்தி கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு அறிவித்தல் வழங்கிய கடித தலைப்பு உற்பத்தி கம்பனி பயன்படுத்துகின்ற கடித தலைப்பினை விட தயாரிக்கப்பட்ட கடித தலைப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், கட்டளையிடப்பட்ட மொத்த அலகுகளின் அளவிற்குரிய உற்பத்தி கம்பனியால் அவ்வப் போது விநியோகிக்கப்பட்ட தடுப்பூசி பகுப்பாய்வு சான்றிதழ்களில் தரக்கட்டுப்பாட்டு முகாமையாளரின் கையொப்பம் மற்றும் மாதிரியும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்த போதிலும், அந்த வேறுபாடுகள் தொடர்பாக பெறுகை நிறுவனம் எந்தவொரு கவனமும் காண்பித்திருக்கவில்லை. | | |
| (ii) | இலங்கை சுங்க திணைக்களத்தின் ஆவணத் தரவுகளின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வழங்கல்களுக்கு உரிய வழங்குனரால் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகை செயற்பாடுகளின் போது உரிய கட்டளைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையில் பதிவு செய்த உற்பத்தியாளர் இல்லாதிருந்த வேறு இரண்டு இறக்குமதி கம்பனிகள் மூலம் 3,898,900 தடுப்பூசி மாத்திரைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இரண்டு கம்பனிகளும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த கம்பனியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | வழங்குனரால் வழங்கப்பட்ட இந்த தடுப்பூசிகள் தொடர்பாக அரசாங்கத்தின் 02 வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு உரியதாக பரீட்சிக்கப்பட்ட தேசிய மருந்துகளின் தரச் சான்று ஆய்வு கூடத்தின் (NMQAL) பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் பரிசோதனை செய்யப்பட்ட தடுப்பூசிகள் Sterility பரிசோதனையின் போது பிரித்தானிய மருந்து மாதிரிகளுக்கு இணங்காத வகையிலும், பரிசோதனைக்காக கிடைக்கப் பெற்ற தடுப்பூசிகளின் மாதிரிகள் மற்றும் பதிவு செய்வதற்காக தேசிய ஔடதங்கள் தரச் சான்று ஆய்வு கூடத்திற்கு (NMQAL) சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட உற்பத்தியின் மாதிரி உறைகள் ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருந்தமை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் செயற்படாமையினால் ஏற்படுகின்ற இழப்புக்கள் மற்றும் நட்டங்களுக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக மிகைக் கட்டணம் விதித்தல் வேண்டும். இந்த பெறுகைகள் தொடர்பாக முறையாக சுயாதீனமான விசாரணை நடாத்தி மிகுதி நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. இந்த பரிசோதனையின் விளைவாக இந்த தடுப்பூசிகளை உடனடியாக பாவனையில் இருந்து அகற்றுமாறு அரசாங்கத்தின் சகல வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும், தனியார் விற்பனை சாலைகளில் இருந்தும் அகற்றுமாறு உரிய கம்பனிக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் விடுக்கும் போதும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய இருப்புகளில் காலாவதியாகும் திகதியை விஞ்சியிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iv) | இந்த இன்டெண்டுகளுக்குரிய இருப்புகளின் உற்பத்தியாக பெறுகை ஆவணங்கள் மற்றும் சுங்க விடுவிப்பு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தி கம்பனி உரிய கால எல்லையில் இந்த வழங்குனருக்கு எந்தவொரு விடயமும் வழங்காதிருந்தமையும் இந்த பெறுகைகள் தொடர்பாக தமது எந்தவொரு அறிவித்தலும் செய்யாதிருந்தமையும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பௌதீக கணக்காய்வு மேற்கொண்ட நிறுவனத்தினால் கணக்காய்விற்கு எழுத்துமூலம் உறுதிப்படுத்திய போதும், உரிய பெறுகை கோவைகளில் கடிதங்கள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பகுப்பாய்வு சான்றிதழ்கள் உற்பத்தி கம்பனியின் கடித தலைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கடித தலைப்பு 2015 யூன் 10 ஆம் திகதி உற்பத்தி கம்பனியினால் வழங்குனருக்கு தான் இலங்கையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதாக காண்பித்து கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்து அழகு சாதன பொருட்கள் மற்றும் மருந்துகள் (Cosmetic Devices and Drug) அதிகார சபைக்கு அனுப்பிய கடித தலைப்பினை விட வேறுபட்ட கடித தலைப்பாக இருந்தது. | | |
| (v) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட உறைககளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் இந்த தடுப்பூசிகளை பதிவு செய்வதற்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி உறைகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்த கொழும்பு தேசிய வைத்தியசாலையில் எஞ்சியிருந்த உறைகளில் பல்வேறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (vi) | மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாக வழங்குனர் கம்பனி கறுப்பு பட்டியலில் இடுவதற்கு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதிலும், தேவையான நடவடிக்கைகள் இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கிரயம் ரூபா 1.49 மில்லியன் ஆன Ceftriaxone Sodium for Injection BP 500mg அலகுகள் 79,500 தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இன்றிய வழங்குனரின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களின் பிரகாரமும், இறக்குமதியின் போது சுங்க திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் பிரகாரமும் தடுப்பூசிகளின் உற்பத்தியாளராக குறிப்பிடப்பட்ட கம்பனி இன்றி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாதிருந்த கம்பனி ஒன்றின் மூலம் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. வழங்குனரால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட இருப்புக்கள் தொடர்பாக தேசிய ஔடதங்கள் பாதுகாப்பு பரிசோதனை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்படிருந்த தர பரிசோதனையின் போது USP லேபல்களின் தேவை மற்றும் தற்போது காணப்படுகின்ற லேபல்களில் காணப்பட்ட வேறுபாடுகளின் காரணமாக உரிய பொருட்களின் இருப்பினை பாவனையில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தி எதிர் காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான மாதிரிகள் இணங்காமையினால் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட இருப்புக்களுக்காக செலவாகிய கிரயத்தை மீள செலுத்துமாறு கூட்டுத்தாபனத்தால் வழங்குனருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக ஏற்றுக்கொள்ளாத வழங்குனரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வழங்குனரிடமிருந்து கைவிடப்பட்டிருந்த கொடுப்பனவுகளில் தரத்தன்மை இன்றிய மருந்துகளை வழங்கியதன் காரணமாக ஏற்பட்ட ரூபா 1.86 மில்லியன் கிரயத்தை குறைத்து 2022 ஆகஸ்ட், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது ரூபா 273.6 மில்லியன் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அரச ஒசுசலைகளில் விற்பனைக்காக Diclofenac Potassium Tablates (50mg) மருந்தில் (5x10) அளவில் 48,000 உறையிடப்பட்ட அலகுகளை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட கட்டளைக்குரியதாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு பொதியிடல் அலகொன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 0.248 வீதம் ஐக்கிய அமெரிக்க டொலர் 11,904 தொகைக்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் பெறுகை தீர்மானங்களை எடுப்பதற்காக 167 நாள் காலம் எடுத்திருந்தது. அவ்வாறே வழங்குனரை தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் வரையிலும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் அந்த வழங்குனரின் பதிவு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளது வரையாக்கப்பட்டுள்ள அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கையை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்புக்கள் மற்றும் நட்டங்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து மிகை கட்டணமாக அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைந்திருந்த போதும் அதனை நீடித்துக் கொள்வதற்காக 258 நாள் காலம் எடுத்தமை கட்டளை தாமதமடைந்ததற்கு பிரதான காரணமாக இருந்தது. அவ்வாறே கேள்விதாரரால் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் இந்த மருந்துகளின் மாதாந்த சராசரி விற்பனை அலகுகள் 5000 ஆக இருந்ததுடன், 2021 யூன் மாதம் முதல் அரச ஒசுசலைகளில் இந்த மருந்துகள் பற்றாக்குறையாக காணப்பட்டது. அதன் காரணமாக 2021 யூன் முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரை கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட மொத்த விற்பனை அண்ணளவாக ரூபா 9.75 மில்லியன் ஆகும். இந்த மருந்துகள் அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தினாலும் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும் அதன் மூலம் கொள்வனவு செய்வதற்கோ அல்லது ஒசுசலைகளில் காணப்படுகின்ற மருந்து பற்றாக்குறைகளை தீர்த்து வைப்பது தொடர்பிலோ கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (உ) | அரச ஒசுசலைகளில் விற்பனைக்காக Etoricoxilo Tablats 60(mg) மருந்தில் 30,000 உறையிடப்பட்ட அலகுகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த கட்டளைக்கு உரியதாக ஆகக் குறைந்த இரண்டாம் மற்றும் ஆகக் குறைந்த ஐந்தாவது | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த பெறுகைகள் தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கேள்விதாரருக்கு முறையே கட்டளையில் 25 சதவீதம் மற்றும் 75 சதவீதமாக கேள்வி கையளிக்கப்பட்டிருந்து. எனினும் மேற்கூறப்பட்ட இரண்டாவது ஆகக் குறைந்த விலையினை விட 153 சதவீத விலை அதிகரிப்புடன் ஐந்தாவது கேள்விதாரருக்கு இந்த பெறுகையில் 75 சதவீதம் கையளிப்பதற்கு நியாயமான காரணம் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே இந்த விடயத்தில் ஆகக் குறைந்த விலை மற்றும் ஆகக் கூடிய விலை அலகொன்றுக்கு ரூபா 345 விலை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுன், அது சதவீதமாக 128 வீதம் ஆகும். இந்த பெறுகையில் 75 சதவீதம் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரரினை நீக்கி ஐந்தாவது ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு கையளித்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக கிரயமாக ரூபா 6.2 மில்லியன் செலவிடுவதற்கு ஏற்பட்டமையால் ஆகக் குறைந்த விலையில் மருந்து வழங்கும் கூட்டுத்தாபனத்தின் நோக்கமும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்துகள் ஒசுசலைகளில் பற்றாக்குறையாக காணப்பட்ட காலம் 329 நாட்கள் ஆகும். | | |
| (ஊ) | அரச ஒசுசலைகளின் விற்பனைக்காக Cetrize Syrup 5mg/5ml Bottle போத்தல்களில் உறையிடப்பட்ட 150,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 2020 யூன் 26 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்குரிய ஆகக் குறைந்த விலையாக அலகொன்று ரூபா 29.25 சமர்ப்பித்த கேள்விதாரருக்கு தேசிய மருந்துகள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த பெறுகைகள் தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் காணப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டு அலகொன்று ரூபா 71.30 விலை சமர்ப்பித்த இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு அலகொன்று ரூபா 69.93 இற்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஆகக் குறைந்த கேள்விதாரரின் கேள்வி ஆவணங்களின் பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த கேள்விதாரர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை புதுப்பித்துக் கொள்ளவோ அல்லது ஆகக் குறைந்த கேள்விதாரர் இந்த பெறுகைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.06 மில்லியன் மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக இந்த மருந்துகளின் கொள்வனவு கிரயம் ஆகக் குறைந்த கேள்வி பெறுமதியை விட 138 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டதுடன், அந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கமும் தவறவிடப்பட்டிருந்தது. கேள்விதாரர் மருந்துகளில் 99,000 அலகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரச ஒசுசலைகளில் இருப்பு காணப்படாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்து. | | |
| (எ) | கூட்டுத்தாபனத்தின் இருப்புக்கள் மற்றும் கட்டுப்பாட்டு முகாமையாளரின் கொள்வனவு நடைமுறைகளின் பிரகாரம் Clonazepam Tablets (0.5mg) என்ற மருந்தின் உறைகளில் 48,000 அலகுகள் (25x10) ரூபா 20.07 மில்லியன் கிரயத்தில் | இந்த இருப்புக்கள் சில மாதங்களுக்கு போதியளவான பிரகாரம் ஒசுசலைகளின் களஞ்சியத்தில் இருப்பு மட்டம் பேணிச் செல்லப்படுவதுடன், சில மாதங்கள் பிரதான | மீண்டும் கட்டளையிடும் இருப்பு மட்டம் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன், களஞ்சியத்திற்கு தேவையான மருந்து இருப்புக்களை |

கொள்வனவு செய்தவற்குரிய ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனருக்கு 2020 செப்டம்பர் 04 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இன்டெண்டுக்குரிய முதலாவது மருந்து இருப்பு 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியும், இறுதி இருப்பு 2022 சனவரி 12 ஆம் திகதியும் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. கொள்வனவு கட்டளை தயாரிக்கின்ற சந்தர்ப்பம் வரையும் இந்த மருந்துகளில் 04 மாதங்களுக்கு முன் இருப்பு முடிவடைந்திருந்ததுடன், இந்த மருந்தின் மீள்கட்டளை இருப்பு மட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் கட்டளையிடப்பட்டதன் காரணமாக தொடர்ச்சியாக 3, 4 மாதங்கள் இரத்மலானை களஞ்சியத்தில் இருப்பு காணப்படாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. மருந்துகளின் விற்பனை எதிர்வுகூறலின் பிரகாரம் வருடாந்த தேவைக்கு இணங்கும் வகையிலும், இருப்பு பூச்சியமாக காணப்பட்டுகின்றமையினால் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க கூடிய விரைவில் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தமையும் கொள்வனவு கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் மொத்த மருந்து இருப்பு அளவும் களஞ்சியத்திற்கு கிடைப்பதற்காக 02 வருடத்திற்கு அண்மித்த காலம் எடுக்கப்பட்டிருந்தது. 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையும் ஒரு வழங்குனரிடம் இருந்து இந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இன்டெண்டுவில் குறிப்பிடப்பட்ட திகதியிலும் மருந்துகளை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியமையால் 2019 மார்ச் முதல் 2022 ஆகஸ்ட் வரை 06 களஞ்சியத்தில் இருப்பு பூச்சியமாக இருந்த போதும் ஒசுசலைகளில் இந்த மருந்துகளை போதியளவான பிரகாரம் காணப்பட்டது. கொரோனா தொற்று நோயின் இடையே இந்த மருந்துகளின் அளவும் களஞ்சியத்திற்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஒசுசலைகள் சிலவற்றில் இருப்பு அறிக்கைகள் பிரகாரம் மருந்துகளின் பற்றாக்குறை அறிக்கையிடப்பட வில்லை.

கட்டளையிடல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு அதிகமான காலம் மருந்துகளின் விற்பனை பூச்சியமாக இருந்தமையினால் அந்த காலப்பகுதியில் கூட்டுத்தபானத்திற்கு விற்பனை வருமானமும் கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஏ) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவையின் அடிப்படையில் Cefotaxime Injection USP 1g தடுப்பூசி குப்பிகள் 250,000 உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்வதற்காக ரூபா 70.70 ஆக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கட்டளை வழங்கக் கூடிய கால எல்லை நீண்டதாக இருந்ததாக குறிப்பிட்டு இந்த கட்டளை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது, அதன் பிரகாரம் அலகொன்றின் விலை ரூபா 540 ஆக சமர்ப்பித்த கேள்விதாரருடன் விலைகள் கலந்துரையாடப்பட்டு (தடுப்பூசி 65,000 இலவசமாக வழங்கும் அடிப்படையில்) தடுப்பூசிகள் வினைத்திறனான விலையாக ரூபா 399.60 விலையில் கொள்வனவு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. தடுப்பூசி குப்பியொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 45.71 ஆகவும், முதலாவது தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் அலகொன்றின் விலை ரூபா 70.70 ஆகவும் இருந்தமையால் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் விலைகளில் முறையே 774 சதவீதம் மற்றும் 465 சதவீதம் அதிகரிப்பாக இருந்தது. இரண்டாவது சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் முதலாவது சந்தர்ப்பத்தின் போதும் கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்ததுடன், அதன் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த பெறுகைகள் தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விலை ரூபா 235 ஆக இருந்த போதிலும், 02 மாதங்களை விட குறைந்த காலத்தின் போது இரண்டாவது தடவை கோரும் போது கேள்விதாரரினால் விலை ரூபா 540 ஆக தீர்மானிக்கப்பட்டமை தொடர்பில் பெறுகை குழு அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் கட்டளையினை கையளித்திருந்தது. இரண்டாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு 2019 திசெம்பர் 13 ஆம் திகதி வரையில் மருந்துகளை வழங்குவதற்கு தவறியிருந்த போதும், முதலாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரரால் 45 நாட்களுக்குள் தடுப்பூசி அலகுகளுள் 250,000 வழங்குவதாக குறிப்பிடப்பட்ட போதும் அது நிராகரிக்கப்பட்டு மீண்டும் ஒரு தடவை கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் 30 நாட்களுக்குள் மருந்துகளை வழங்குவதற்கு தவறியிருந்தார்.

(ஐ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2016 ஏப்ரல் 01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கொள்வனவு முறைப்பாட்டின் பிரகாரம் Ipratropium Pressurized Inhalation BP 20 Mcg/Puff மருந்தின் அலகுகள் 130,000 ரூபா 91.70 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) இந்தப் பெறுகைகளுக்குரிய மூன்று சந்ர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் முதலாவது சந்தர்ப்பத்தின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளது |

| | | | |
|---|---|---|---|
| | போது வழங்குனருக்கு இனடெண்டு விநியோகிக்கப்பட்டு நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருக்கும் போது மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் அறிவித்தலின் பிரகாரம் முதலாவது இருப்பு 09 மாதங்களும், இரண்டாவது இருப்பு 13 மாதங்களும் தாமதாகி வழங்குமாறு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் உரிய வழங்கல் தாமதிக்காதிருந்தமை வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. வழங்குனர் மருந்துகளை வழங்குவதற்கு இணங்கிய திகதியின் பின்னர் உற்பத்தியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளின் காரணமாக மருந்துகளை வழங்க முடியாதிருந்ததாக பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. மருந்துகளை வழங்கும் நிபந்தனைகளின் பிரகாரம் இந்தப் பெறுகைகள் அவசர நடவடிக்கையாக வரையறுக்கப்பட்ட கேள்வி கோரக்கூடிய விரைவாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததாக காண்பித்திருக்கும் போது மருந்துகள் 09 மாதங்கள் தாமதித்து வழங்க வேண்டிருந்தமை அறிவிக்கப்பட்டதன் மூலம் இந்த வழங்கல்கள் அவசரத் தேவையாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | வரையாக்கப்பட்டுள்ள அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கையை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்புக்கள் மற்றும் நட்டங்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து மிகை கட்டணமாக அறவிடல் வேண்டும். இந்த பெறுகைகள் தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகைகளுக்குரிய மூன்றாவது கேள்வி கோரும் சந்தர்ப்பத்தில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

சமர்ப்பித்த கேள்விதாரர் வழங்குனரின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் காலாவதியாக இருந்த போதும் பதிவுச் சான்றிதழ் மீண்டும் பெறப்படும் அடிப்படையிலும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் நிபந்தனைகளின் கீழும் பெறுகைக் குழுவினால் 2017 செப்டெம்பர் 29 ஆம் திகதி அலகொன்று ரூபா 705.40 வீதம் 130,000 அலகுகளுக்காக ரூபா 91.70 மில்லியன் ஆன பெறுமதியில் கட்ளைகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் வழங்குனரால் மருந்து அலகொன்று ரூபா. 14.13 வீதம் 130,000 அலகுகள் ரூபா 1.84 மில்லியன் தொகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யாத கம்பனியினால் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு 4892 சத வீதத்திற்கு அதிகமான விலையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. வழங்குனரால் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாதிருந்த உற்பத்திக் கம்பனியில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளே இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | வழங்குனருக்கு 2017 ஒக்டோபர் 20 இல் கொள்வனவுக் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்குவதற்கு முன் அந்த மருந்துகளின் உறைகள், லேபல் மற்றும் அரசாங்க இலட்சிணைக்காக மருந்து வழங்கல் பிரிவின் அங்கீகாரம் பெறப்படவேண்டியிருந்த போதிலும் அந்த தகவல்கள் மருந்து வழங்கல் பிரிவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டளைக்குரிய முதலாவது இருப்பு (அலகுகள் 6500) இறக்குமதி செய்யப்பட்ட திகதி முதல் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்காக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (iv) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 106(1) ஆம் பிரிவிற்கு முரணாக வழங்குனரால் அரச மருந்தகக் கூட்டத்தாபனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்துகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர் அன்றி வேறு உற்பத்தியாளரின் மூலம் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு மருந்து உறைகளில் கேள்வி ஆவணங்களில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர் விபரங்கள் அச்சிடப்பட்டிருந்தன. | | |
| (v) | வழங்குனரால் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளைப் பதிவு செய்வதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட மருந்துகளின் மாதிரி உறைகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருந்துகளின் உறைகளில் நோயாளர் ஆலோசனைக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் மருந்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட தகவல்களுக்கு இடையிலும் மற்றும் வழங்குனரால் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் போது உற்பத்திக் கம்பனியின் கடிதத் தலைப்பின் கீழ் உள்நாட்டு முகவர் தொடர்பான கூற்று, தரச்சான்றிதழ் கடிதம் மற்றும் உரிய மருந்தின் பகுப்பாய்வு சான்றிதழ் என்பன கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் , அந்த கடிதத் தலைப்புகளும் இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (vi) | இந்தப் பெறுகைகள் அவசர தேவையாகக் கருதி 09 தினங்களான குறுகிய காலத்தில் கேள்வி கோரப்பட்டிருந்த போதும் உடன்படிக்கையின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் வழங்குனரால் இருப்புக்கள் வழங்குவதற்காக 05 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்த போதும் அதற்காக உடன்படிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு 07 இன் ஒசுசலைக்காக மின் பாரந்தூக்கியொன்றை பொருத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 0.72 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பூர்த்தி செய்யப்படாத வேலையின் கீழ் காண்பிக்கப்பட்ட போதும் 07 வருட காலம் கடந்திருந்திருந்தும் இந்த மின் பாரந்தூக்கியின் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முற்பண பிணைமுறியை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டியின் (i) 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் 2021 – 2025 காலத்திற்காக தயாரிக்கப்பட்டு நிறுவன திட்டத்தின் ஒரு பகுதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |